# பிளேட்டோவும்
## வேதாத்திரி மகரிஷியும்





அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. பிளேட்டோவும் வேதாத்திரியும்
2. திருமணம் குறித்து பிளோட்டோவின் பார்வை
3. எளிமையான திருமண முறையை வரவேற்கும் வேதாத்திரி.
4. பருவத்தே பயிர் செய்
5. குழந்தைகள் பொதுவளர்ப்பு முறை
6. இலட்சியக் குடியரசு
7. பிளேட்டோ வகைப்படுத்தியுள்ள அரசாங்கத்துறைகள்
8. உண்மையான அன்பு ஏது ?
9. நம்பிக்கையே வாழ்க்கை
10. ''ஆன்மா'' முரண்படும் சிந்தனையாளர்கள்
11. விமர்சனத்தை பொய்யாக்கிய சிந்தனையாளர்கள்
12. வாழ்க வளமுடன் என்பது சரியா ?

மனிதனுடைய சிந்தனையாற்றல் எனும் பூங்காவில் எண்ணிறந்த மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

அம்மலர்களை, மாலைகளாகத் தொகுத்துக் கொடுத்த சிந்தனையாளர்களில் மூலவர் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ. அவர் வழி வந்து சரித்திரம் படைத்தவர் இந்திய தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

அரசியலறிவு மேலோங்கியுள்ள இன்றையச் சிந்தனையாளர்களையும் இரண்டாயிருத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒருவன் மீண்டும் மீண்டும் சிந்திக்க வைக்கிறான். அவன்தான் பிளேட்டோ.

இனிவரும சமூக முன்னேற்த்திற்கும், இன்றுள்ள சமுதாய நாகரீகத்திற்கும் அநாகரிய காலத்திலே ஒருவன் கருவூலம் அமைத்துவிட்டுப் போனான். அவன்தான் சிந்தனையாளன் பிளேட்டோ.

அந்த அடித்தளத்தில் உலகெங்கும் ஒளி வீசும் வானளாவிய கோபுரங்களை அமைத்தவர் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.

நமது பண்பட்ட சிந்தனைகள் அனைத்திற்கும் அடித்தளம் அமைத்தவன் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ. அந்த அடித்தளத்தில் சிந்தனையின் மறுமலர்ச்சி எனும் கட்டடிங்களை எழுப்பியவர் வேதாத்திரி மகரிஷி.

நடைமுறையில் நல்லதொரு அரசியல் மனித சமுதாய அமைப்பு எதுவென்று தேடியலைந்தவர்கள் தான் பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்.

அவர்கள் தேடித் தத்ததும் நாளை வரையும் நினைவில் நிலைபெறக் கூடிய சமூக சிந்தாந்தந்தான். நிலை நிற்கக் கூடிய சிந்தாந்தம்தான்.

பூலோக மக்களைச் சுவர்க்கத்துக்கு ஏற்றுமதி செய்யாமல் சுவர்க்கத்தைப் பூலோகத்திற்கு இறக்குமதி செய்ய முயன்ற தத்துவஞானிகள் தான் பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்

- சிந்தனையாளர் கார்ல்மார்க்ஸின் பொருளாதாரப் பொதுவுடமை வாதப் புரட்சிக்கும்,
- சிந்தனையாளர் டார்வினின் ஜீவ மூலப் பரிணாமவாதப் புரட்சிக்கும்,
- சிந்தனையாளர் ரூஸோவின் சமுதாய ஒப்பந்தப் புரட்சிக்கும்,
- சிந்தனையாளர் இங்கர்சாலின் மூட நம்பிக்கைக் கண்டனப் புரட்சிக்கும்,
- சிந்தனையாளர் நீட்ஸியின் ஆத்மீகப் புரட்சிக்கும்,
- சிந்தனையாளர் வேதாத்திரியத்தின் ஆன்மீகப் புரட்சிக்கும்

இன்னும் பல சிந்தனையாளர்களின் புரட்சிகள் அனைத்திற்கும் பிளேட்டோவின் சிந்தனைகளின் மூலவேர் இருப்பதை நாம் பார்க்கலாம். தரிசிக்கலாம்.

## பிளேட்டோவும் வேதாத்திரியும் – ஒரு பார்வை

கணிதவியல் அறிஞர் பிளேட்டோ பெரும் செல்வாக்குள்ள கிரேக்கத் தத்துவ ஞானியாவார். பிளேட்டோ சாக்கிரட்டீசின் சீடர், அரிஸ்டாட்டிலின் குரு.

மனிதன் எந்த அரசியலில் எந்த விதமாக எதற்காக வாழ்வது எனச் சிந்தித்தவர். இந்த சிந்தனைக்குரிய வடிவத்தை, ஐக்கியநாடு சபைகள் வரை கொண்டு சென்றவர் வேதாத்திரி.

கிரேக்க நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரில் கி.மு. 427 ல் பிளோட்டோ (கிமு 427 – கிமு 347) பிறந்தார். தந்தையின் பெயர் அரஸ்டோன். தாயின் பெயர் பெரிகட்டியோனி. அவனது இயற்பெயர் அரிஸ்டோக்கிளீஸ். பிளேட்டோவுக்கு முன்னால் உடன் பிறந்த சகோதரர்கள் இருவர். சகோதரி ஒருவர்

கணிதவியல் அறிஞர் பிளேட்டோ பெரும் செல்வாக்குள்ள கிரேக்கத் தத்துவ ஞானியாவார். பிளேட்டோ சாக்கிரட்டீசின் சீடர், அரிஸ்டாட்டிலின் குரு.

மனிதன் எந்த அரசியலில் எந்த விதமாக எதற்காக வாழ்வது எனச் சிந்தித்தவர். இந்த சிந்தனைக்குரிய வடிவத்தை, ஐக்கியநாடு சபைகள் வரை கொண்டு சென்றவர் வேதாத்திரி மகரிஷி.

''பிளேட்டா'' என்றால் கிரேக்க் மொழியில் ''விசாலம்'' என்று பொருள். அவனது இயற்பெயர் அரிஸ்டோக்கிளீஸ்.

அழகிகள் கண்டு மயங்கக் கூடிய அவனது விசாலமான தோள்களைக் கண்டோ, இன்றைய அறிவாளிகளும் மலைக்கக் கூடிய அவனது ''விசாலமான அறிவை நினைத்தோ, அவனுக்குப் பிளேட்டோ என்ற புனைபெயர் ஏற்பட்டுவிட்டது.

சாக்ரட்டீஸ் கொலைத் தண்டனை பெற்றபோது பிளேட்டோவுக்கு இருபத்தெட்டு வயதுதான்.

அமைதியாக வாழ்ந்த தியாகசீலரின் கோரமான சோகமான முடிவு.–– மாணக்கனின் நெஞ்சிலுள்ள ஒவ்வொரு அணுவிலும் அழியாச் சின்னமாகப் பதிந்து விட்டது.

இவர் தனது குருநாதர் சாக்ரடீஸ் மற்றும் தனது மாணவர் அரிஸ்டாட்டிலின் உடன் இணைந்து மேற்குலகின் தத்துவம் மற்றும் அறிவியலுக்கான அடிக்கல்லை நாட்டினார்

கி.மு. 399– இல் இருந்து 12–ஆண்டுகள் இத்தாலி, ஆப்பிரிக்கா, எகிப்து, யூதேயா மற்றும் சில நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தார்.

தனது பயணத்தில், மற்ற சமூகத்தைச் சேர்ந்த மக்களின் பண்பாடு, கலாச்சாரங்கள் அது குறித்த ஆராய்ச்சிகள் என உலக மக்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்துணரும் ஆர்வம் அவருக்குள் இருந்தது.

12– வருடங்கள் உலகம் சுற்றிய வாலிபன் பிளாட்டோ சொந்த நாட்டுக்கு வந்த பின்பு மக்களுக்கு கல்வி அறிவின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும் என்ற வேட்கை அவருக்குள் அதிகரித்தது.

'அகடெமியா' என்ற பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினார் பிளாட்டோ. அந்த காலத்தில் அகடெமியா (Acadamus) என்ற மாவீரன் இருந்தான். அவனுடைய நினைவாகவே பல்கலைக்கழகத்திற்கு அப்பெயர் வைக்கப்பட்டது.

பள்ளி படிப்பை முடித்த இளைஞர்களின் அறிவுத் தேடலுக்கு அவை முக்கியத்துவம் கொடுத்தன.

உலகின் முதல் பல்கலைக்கழகம் "அகடெமியா" தான். கி.மு.387– இல் பிளாட்டோவினால் உருவாக்கப்பட்ட அகடெமியா 200– ஆண்டுகள் தொடர்ந்து இயங்கியது. அதில் அறிவியல், தத்துவஞானம் என்ற இரண்டு பிரிவுகள் இருந்தன.

நாட்டின் அரசியலில் எதிர்காலத்திற்கு தக்க பயிற்சியுடைய இளைஞர்கள் இருக்க வேண்டும் என்பது பிளாட்டோவின் கருத்து.

வசதிப்படைத்த இளைஞர்கள் அந்தக் காலங்களில் குடியும், கூத்தும், பெண்களுடன் பாலீயல் தொடர்புகளிலும் இருந்த கிரீஸ் நாட்டு இளைஞர்களில் இருந்து பிளாட்டோ மிகவும் மாறுபட்டு இருந்தார்.

உலகத்தின் மானுட சமத்துவம், அறிவுடைய மானுட வம்ச விருத்தி, சமதருமம், பொதுவுடமை, பெண் உரிமை, குடும்பக்கட்டுப்பாடு, கட்டற்ற காதல் உரிமை, பேச்சு சுதந்திரம், ஒழுக்க நியதி நெறிமுறைகள், சொத்துரிமை, பொதுவுடமைக் குழந்தைகள் என சாக்ரடீஸ் தன் நண்பர்களுடனும், மாணவர்களுடனும் விவாதித்துக் கொண்டிருந்தார்.




சங்கம் அமைத்து ஆதென்ஸில் விவாதித்ததை பிளாட்டோ கல்வி அறிவுக்குள் புகுத்திவிட்டார்.

பிளாட்டோவின் அரசியல் சீர்திருத்த சிந்தனைகளை குடியரசு தொகுதிகளாக்கி வைத்திருப்பதை கேள்விப்பட்டு கிரேக்க நகர மன்னன் 'டையோனிஸஸ்' பிளாட்டோவை அழைத்து குடியரசு சித்தாந்தங்களை பார்த்தான்.

பிளாட்டோவின் சிந்தனைகள் அவனுக்கு தீவிரவாதத் திட்டங்களைப் போன்று இருந்திருக்க வேண்டும்.

மன்னனுக்கு கோபத்தை கொடுத்தது. பொது பொண்டாட்டி, பொது புருஷர்கள், பொது குழந்தைகள் என்று என்ன கண்டபடி கிடக்கிறது என்ற கோபம். மன்னன் அதை தத்துவஞானமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

பிளாட்டோவை பிடித்து சிறையில் அடைக்கச் சொல்லி உத்தரவு போட்டான். தலையை வெட்டியெறியும் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அதிர்ந்து போன பிளாட்டோவின் நண்பர்கள் சிலரின் தலையிட்டினால் பிளாட்டோ உயிர் தப்பினார். அவரை பிடித்து அடிமையாக வேறு நாட்டுக்கு விற்க கட்டளையிட்டான் மன்னன்.

பிரபு வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் பிளாட்டோவை அடிமையாக விலைக்கு வாங்கினார். தன்னுடைய குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்கு உபயோகித்த அவர் சில காலங்களில் பிளாட்டோவை விடுவித்தார்.

இனி தனக்கு அடிமையில்லையென்றும், இனி சுதந்திர மனிதனாக இருக்கலாம் என்றும் அனுப்பிவிட்டார். மீண்டும் ஆதென்ஸ் வந்த பிளாட்டோவுக்கு கிரேக்க மன்னரான டையோனிஸஸ் தவறுக்கு மன்னிப்புக் கேட்டு ஓர் கடிதம் அனுப்பினான்.

அகடெமியா பல்கலைக்கழகத்தில் தன் இறுதிக் காலம் வரையில் இளைஞர்களுக்கு தத்துவம், அறிவியல் விவாதத்தில் கவனஞ்செலுத்தினார் பிளாட்டோ. அவர் இறக்கும் போது வயது 81.

பிளாட்டோ தத்துவங்கள் அவர் வாழ்ந்த சூழலுக்கு ஏற்ப ஆய்வு செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது.

கிரேக்க நாகரித்தில் ஒருபுறம் செல்வச் செழிப்புகளும், மறுபுறம் ஏழ்மையும், பட்டினி, பஞ்சமும் உடைய மற்றொரு சமூகமும் இருந்தது.

செல்வந்தர்கள் ஆடம்பரம், மது, பெண்கள் தொடர்பு, கொண்டாட்டங்கள் என ஆடம்பரமாக இருந்தனர். திடீர் திடீரென இதர நாடுகளின் படையெடுப்பு; வெற்றி கட்டாயம் பெற்றாக வேண்டிய சூழல்.

தோல்வியடைந்தால் தங்களுடைய செல்வங்கள், உடமைகள் அனைத்தையும் பறி கொடுத்தாக வேண்டிய கட்டாயங்கள் போன்ற சூழல்களால் பிளாட்டோவின் சித்தாந்தம் கம்யூனிஸ்ட் கோட்பாடுகள் போல் இருந்ததோ என்னவோ என்று ஆராய்ச்சியாளர்கள் குழம்பினர்.

இவரைப்பற்றி ஆய்வாளரான ஏ. என். ஒயிட்ஹெட் பின்வருமாறு கூறியுள்ளார்:

ஐரோப்பிய தத்துவ பாரம்பரியத்தின் பாதுகாப்பான பொதுவான குணாதிசயம் என்னவென்றால் அது பிளாட்டோவின் அடிக்குறிப்பு வரிசையை கொண்டிருப்பதுதான்.

அவர் எழுதியவற்றின் சாராம்சங்களை அறிஞர்கள் சந்தேகத்துடன் எடுத்துக் கொண்ட சிந்தனையின் முறையான திட்டம் என்ற பொருளில் நான் சொல்லவில்லை. நான் அவற்றில் பரவியுள்ள பொதுவான கருத்துக்களின் செறிவைத்தான் சொல்கிறேன்.

பிளாட்டோ ஒரு சிறந்த எழுத்தாளர் என்பது அவர் எழுதியுள்ள சாக்ரடீஸின் கேள்வி பதிலில் இருந்து தெரிகிறது. இதில் முப்பத்தாறு உரையாடல், பதிமூன்று கடிதங்களை இவர் எழுதியுள்ளதாக கூறப்படுகிறது.

பிளாட்டோவின் எழுத்துக்கள் பல வடிவங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பிளாட்டோ எழுதியவற்றுக்கு பெயரிடுதல் மற்றும் குறிப்பிடுதலை பற்றி விவாதிக்கும் பல்வேறு கூட்டங்கள் நடைபெற வழிவகுத்தது.

பிளாட்டோவின் உரையாடல்கள் தத்துவம், தர்க்கம், நெறிமுறைகள், சொல்வளம் மற்றும் கணிதம் உள்ளிட்ட பல துறைகளை கற்பிக்க பயன்பட்டது.

பிளேட்டோ 36 நூல்கள் எழுதினார். அவை பெரும்பாலும் அரசியல், அறிவியல் பற்றியவை.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் சென்னைக்கு அருகில் உள்ள கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் செங்குந்த கைக்கோளர் மரபில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்ப முதலியார், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்திக் கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பச்சூழலில் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்பத் தொழிலான தறி நெய்தலைச் செய்யத் தொடங்கினார்.

18ஆவது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளைக் கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார். பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது;

இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்துப் பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனதைத் தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் துன்பத்தைப் போக்கவும் பாடுபட்டார்.

தன் இரண்டு மனைவியருடைய மனதையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில் வறுமை என்றால் என்ன ? கடவுள் என்பது எது ? அதை ஏன் காண முடியவில்லை ? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார்.

அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' World peace என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார்.

இன்று பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது ஆன் லைன் வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35ஆவது வயதில் ஞானம் பெற்றார்.

அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில் பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களைத் தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர் தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார்.

தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958–ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்ன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில

1. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2. வாழ்வியல் விழுமியங்கள்
3. பிரம்மஞான சாரம்
4. நான் யார் ?
5. ஞானக்களஞ்சியம்

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

வேதாத்திரியத்தின் வைர வரிகள்''வாழ்க வையகம்'' ''வாழ்க வளமுடன்''

## திருமணம் குறித்து பிளோட்டோவின் பார்வை

- மனிதன் அழிவற்ற நிலையில் ஒட்டிக் கொள்ள வேண்டும். என்றென்றும் தன் ஸ்தானத்தில் தனக்குப் பின்னால் கடவுளின் தொண்டார்களாக விளங்கத் தன் குழந்தைகளின் குழந்தைகளை விட்டுச் செல்ல வேண்டும். இதைக் கவனிக்காமல் ஜனங்களின் மத்தியில் தனியாளானாக இருப்பானாகில், முப்பத்தைந்து வயதுவரை இன்னும் மணம் செய்துக் கொள்ளாமல் இருப்பானாகில, அவன் அபராதம் செலுத்துவானாக....'' – பிளேட்டோ.

''சந்ததனியாகிற நூலை அறுத்தவிடாமலிரு'' என்று இதைத்தான் தைத்திரியோபநிஷத் வலியுறுத்துகிறது.

''சந்ததிக்கு அழகு வந்ததி செய்யாமை'' என்று ஔவையாரும் பிளோட்டோ கருத்தை ஆதரிக்கிறார்.

ஆனால்.......திருமணப் பொருத்தம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பிளோட்டோவின் கருத்து...........

(நாம் வீட்டில் வளர்க்கும் நாய் முதலான மிருகங்கள் நல்ல குட்டிகள் போட வேண்டுமானால் எந்த முறையை அனுஷ்டிக்கிறோம் ? நல்ல நாயை, அதைப்போல நல்ல உடல் ஆரோக்கியமும், யௌவனமும் உள்ள நாயோடு பக்குவமான வயதில் சேர வைத்தால் நல்ல நல்ல குட்டிகள் உற்பத்தியாகும். கிழட்டு நாயை யௌவன நாயோடோ, ஆரோக்கியமான நாயை ஆரோக்கியமற்ற நாயோடு இணைய விடுவதில்லை.)

இந்த நிலையைத் தான் மனித இனங்கள் விஷயத்திலும் அனுசரிக்க வேண்டும்'' என்று தனது குடியரசில் விளக்கியுள்ளார்.

''உடற்பொருத்தம், மனப் பொருத்தம், சுபாவப் பொருத்தம், அறிவுப் பொருத்தம் முதலான எல்லாவற்றிலும் உயர்ந்தவர்களே (திருமணத்தில்) ஒன்றுசேர விடவேண்டும். பலகீனமானவர்களை'' பலகீனமானவர்களோடு இணைவதைக் கூடியவரை குறைத்துவிட வேண்டும்.

உடற் பலமும் திறமையும் வாய்ந்த வீர வாலிபர்களுக்குப் பெண்களுடன் அடிக்கடி உறவு வைத்துக் கொள்ள அதிக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

அத்தகையவர்களுக்கு முடிந்த வரை எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் நாட்டுக்கு நல்லது தானே ?

''காவடியின் பாரம் போல் காதல் இருபக்கமும் பொருந்தி இருந்தால் தான் இன்பமாகும்'' என்ற திருக்குறள் கருத்து இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

''ஒவ்வொரு மணமகனுக்கும் மணப்பெண்ணிற்கும் முன்னதாக ஆரோக்கிய சர்டிபிகேட் தேவை'' (குடியரசு சட்டம் 772)

பிளோட்டோவின் இந்த முறை சுவாமி சிவானந்த பரமஹம்சரால், இந்தியாவில் இன்றளவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தலைமையிடம், சித்தசமாஜம், வடகரை, கேரளாவில் அமைந்துள்ளது..

# எளிமையான திருமண முறையை வரவேற்கும் வேதாத்திரி

காதல் மணத்தை வரவேற்கும் வேதாத்திரி மகரிஷி,

''பெண்கள் தம் விரும்பபம்போல் கணவன் தேர்ந்து
பிரியமுடன் காதல் வாழ்வெய்தல்நன்று'' (ஞா.க.)

''ஆண்பெண் உளம் ஒன்றுபட்டு உலகில் வாழ
எண்ணத்தால் முடிவு கொண்டோ செயலில் கண்டோ
ஒருவர் ஒருவர்க்கு உடல்பொருளோ டாற்றல்
உவந்து அர்ப்பணித்த உளநிலையே காதல்'' (ஞா.க.)

என்று கூறும் வேதாத்திரியார் தங்கள் பெற்றோர்களின் விருப்பம்போல் மணந்தாலும் நன்று என்கிறார்.

மேலும் திருமணத்தை எளிமையான முறையில் ஆடம்பரமின்றி வீண் செலவின்றி அனைவருக்கும் நலம் பயக்கும் என்கிறார்.

# பருவத்தே பயிர் செய்

பிளோட்டா மேலும் சொல்கிறார்......

- ''யவன பருவத்தில் உள்ளவர்களுக்குத்தான் குழந்தைகள் உற்பத்தியாக வேண்டும்.
- பெண்களுக்கு இருபது வயதிலும், ஆண்களுக்கு முப்பது வயதிலும் பரிபக்குவமான யௌவன பருவம் துவங்குகிறது.
- பெண்கள் இருபது வயதிலிருந்து நாற்பது வயது வரை குழந்தைகள் பெறலாம்.
- ஆண்களோ, வாழ்வின் ஜீவத் துடிப்பு மிகுந்த பக்குவம் அடைந்ததும் இருபத்தைந்து வயதில் இருந்து ஐம்பத்தைந்து வயது வரை குழந்தைகள் பெறலாம்.
- அவைதான் உடலும் அறிவும் பூரண மலர்ச்சி பெற்ற வீரிய சக்தியுடன் விளங்கும். இந்த வயது எல்லைகளைத் தாண்டிப் பிறக்கும் குழந்தைகள் புனித மற்றவையென ராஜ்யத்தால் புறக்கணிக்கப்படும். (குடியரசு)

(மேற்கூறிய ஜனன வரையறைக் காலத்திற்கு முன்போ பின்போ எந்த நேரத்திலும் சரியான ஜோடிகள் காதல் இன்பத்தில் ஈடுபடலாம்.

ஆனால் குழந்தைகள் பிறக்காமல் கர்ப்பதடை செய்ய வேண்டும். ஏனெனில் ஆரோக்கியமற்ற குழந்தைகள் பிறக்காமல் கட்டுப் படுத்துவது தேச நலத்தை எதிர் நோக்கியுள்ள் ஒரு கடமையாகும்.)

# குழந்தைகள் பொதுவளர்ப்பு முறை

குழந்தைகளுக்கு பொதுவளர்ப்பு முறை வேண்டும் என்பது வேதாத்திரியத்தின் கருத்தாகும்.

பெண் பெருமைப்படுத்தப்பட்டு முன்னேற்றமடைந்தால் சமூக மேம்பாடு, உலக சமாதானம் தாமே தோன்றிவிடும் என்று வேதாத்திரி குறிப்பிடுகிறார்.

எதிர்கால உலகச் சமாதான வித்தாய் திகழ்வது குழந்தை. அக்குழந்தை வளர்ப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உலக அமைதியின் தொடக்கத்திற்கு உதவி செய்யவும் நமக்கு விடுதலை கிட்டவும் பெண் தான் பெற்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்குவதற்குத் தன் பாசத்தைத் துறந்து பெண் விடுதலைக்கும் உரியதான அந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும்.

''பிறக்கின்ற குழுந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி,
பெற்றோர் மக்கள் பாசம் எழாமல் செய்து,
இறக்கின்றோர் சொத்தும்,முதியோர், நோயுற்றோர்,
இவர்களையும் பொது ஆட்சி ஏற்றுக் கொண்டு,
அறப்பணிக்கே தகுதியாகக் குழந்தைகட்கு
அறிவு, தொழில், கல்விகளைப் புகட்டவேண்டும்.'' (வேதாத்திரியம்)

என்கிறார். இந்த மனநிலை ஒவ்வொருவருக்கும் வாய்க்குமானால் மக்கள் முந்தைய இயற்கை நிலைக்குத் திரும்புவர்.

சித்த சமாஜ ஆசிரமத்தில் பிளேட்டோவின் முறைப்படி இன்றளவும் குழந்தைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதை யாம் அந்த ஆசிரமத்தில் முன்று நாட்கள் தங்கிருந்து ஆய்வு செய்தோம்.

சாதி, மதம், இனம், மொழி, செல்வம் இவற்றைப் பற்றி எழும் பேத உணர்ச்சிகள் அனைத்தும், பெற்றோர்களே குழந்தைகளை வளர்ப்பதால் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்றன.

பெற்றவர்களின் பாசத்தால் எண்ணிறந்த குழந்தைகள் சமூக வாழ்விற்குப் பயனற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

அறிவு உடல் தத்துவமறிந்த அறிஞர்களின் திட்டப்படி பொது முறையில் வளரும் குழந்தையால்தான் எதிர்காலத்ததில் மனித இனம் சிறப்புற்ற வாழ முடியும் என வேதாத்திரியார் உறுதியாக நம்புகிறார்.

''ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுத் தந்து,
உலகிலுள்ள குழந்தைகளை உமதாய்க்கொண்டு (உலக சமாதானம் பாடல் 86)

வாழ்வதே சிறந்தது என்கிறார்.

இதனால் உலக மக்கள் எல்லாரும் அமைதியாக, அன்பாக, இன்பமாக, வாழவும் மனித இனத்தின் இறுதி இலட்சியமான உலகச் சமாதானமும் பற்றற்ற வாழ்வும் பெறலாம்.

இந்த நல்விளைவுகளைக் கருத்தில் கொண்டு, பெண்கள் தம்மக்கள் என்ற பாசத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்று பல இடங்களிலும் வற்புறுத்துகிறார்.

''மாலை நேரங்களிலே எவரென்றாலும்,
மழலை மொழிக் குழந்தைகளின இருப்பிடம் ஆம்''
சோலை சூழ்நிலையங்கட்கென்றும் சென்று,
சுதந்திரமாய்க் குழந்தைகளோடு ஆடலாகும்''

(உலக சமாதானம் பாடல் 87)

''தன் குழந்தை'' என்ற குறுகிய நினைவை ஒழிப்பதும் தவிர குழந்தைகளிடம் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்பையும் கடமையையும் வேதாத்திரி மகரிஷி எந்த வகையிலும் குறைத்துக் கொள்ள அவர்களை வற்புறுத்தவில்லை.

''நல்ல முறையில் குழந்தைகளை வளர்க்க
நாடனைத்தும் சேர்ந்து ஒருதிட்டம் கண்டால்,
அல்லல் படும் தாயமார்கட் கமைதி கிட்டும்.'' (உலக சமாதானம் பாடல் 89)

குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு, உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு நல்ல உயர்வான திட்டம் வகுத்துவிட்டால், அன்றுதான் பெண்ணினத்திற்கு வாழ்வில் அமைதி கிட்டும்.

(கேரளாவில சித்த சமாஜ ஆசிரமத்தில் பிளோட்டோவின் முறைப்படி இன்றளவும் குழந்தைகள் பொதுமுறையில் வளர்க்கப்பட்டு வருகிறது,)

## இலட்சியக் குடியரசு

நீதி, நியாயம், உண்மை, அழகு, பொதுநலம் எல்லாமே Rightness இல் அடக்குகிறார் பிளாட்டோ.

அவரிடம் அந்தக் கட்டுப்பாடுகள் இருந்ததால் தான் ஆதென்ஸ் இளைஞர்களுக்கு பள்ளிப்படிப்புடன் தர்க்கவியல், அறிவியல் அறிவுக்கு பழக்கி விட்டால் மேன்மையடையும் சமூகம் உருவாகலாம் என்ற சிந்தனை இருந்தது.

தனிமனித சுதந்திரத்தை ஸொஃபிஸ்டுக்கள் (Sophist) வேறு நோக்கில் கையாண்டார்கள். பலசாலியின் கருத்தே நீதியின் அடிப்படை என்றார்கள்.

பிளாட்டோவுக்கு அவை சகிக்க முடியாதவைகளாக இருந்தன. அப்போது உருவாக்கியவைதான் பிளாட்டோவின் ‘இலட்சியக் குடியரசு’ என்ற நூல்.

அரசு நிர்வாகத்தை நடத்தும் உரிமை திறமையும், அறிவும் உள்ளவர்களே நிர்ணயிக்க வேண்டும் என்றார்.

’’மனிதர்களின் பிளவுக்கு ‘நான்’ என்னும் உணர்ச்சியான தன்னலம் ஒழிய வேண்டுமானால், நான், எனது, என் மனைவி, என் மக்கள், என் குடும்பம், என் வீடு, என் நிலம் என்ற தன்னல உணர்வுகளை ஒழித்து விட்டால் எல்லாம் பொதுவாகி விடும். தன்னலத்திற்கு இடம் இருக்காது என்று பிளாட்டோ கருதினார்.

பொதுவுடமை வாழ்க்கையில் தன்னலமின்மையால் ஏற்படும் நேர்மை என்னும் சமன்பாடு ஏற்படும்.

தனி மனிதன் சிறந்த நிலையில் இருப்பான் அதுவே இலட்சியக் கூட்டுறவு An Ideal Commonwealth என்ற பிளாட்டோவின் கூற்றுக்கள் குடியரசு என்னும் உரையாடல்களில் ஐந்நூறு பக்கங்களுக்கு மேல் விளக்கி இருக்கிறார்.

''நான்'' என்ற தத்துவமே ''நாம்'' என்கிறது வேதாத்திரியம்.

''நான் என்ற தத்துவமே நாமாய் உள்ளோம்
நாடுகள் பலவற்றில் வாழுகின்றோம்
ஊன் உருவம் வரை அறிவை எல்லையாக்கி
ஒருவருக் கொருவர் இன, தேச, ஜாதி,
நான் ''தனது எனும் பேதம் கொண்டு வாழ்வில்
தனித்தியங்கித் துன்புற்று ஆழ்ந்தாராய்தோம்.
ஆமை நிலையறிந்து ஆராய்ந்து கண்ட
ஆட்சிமுறை உலக சமாதானத் திட்டம்.'' (உலக சமாதானம் பாடல்.57)

இருப்பினும் பிளாட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டில் (Aristotle) உள்பட பல மாணவர்களிடம் இலட்சியக் கூட்டுறவு சிந்தனையில் கருத்து வேறுபாடுகள் இருந்தன.

## பிளேட்டோ வகைப்படுத்தியுள்ள அரசாங்கத்துறைகள்

1. பூரண அறிவு மிகுந்த அரசு
2. பூரண அறிவற்ற அரசு
3. அறிவற்ற அரசு

பூரண அறிவு மிகுந்த அரசு (The State of Perfect Knowledge)

இவ்வாறான அரசின் இறைமையை இவ்வரசு பாதுகாத்துக்கொள்ளும்.

மிகச் சிறந்த இலட்சிய நோக்கம் கொண்ட அரசாக செயற்படும். இதனால் இவ்வாறான அரசுடன் ஒப்பிட்டுத் தான் ஏனைய அரச முறைமைகளை மதிப்பீடு செய்ய முடியும்

பூரண அறிவற்ற அரசு (State where there is Unprotected Knowledge)

இவ்வாறான அரசுகளால் மனிதன் தன் பூரண சுதந்திரத்தினை இழந்தவனாயிருப்பான்.

இவ்வரசின் சட்டங்கள் மிக அழுத்தம் கொடுப்பனவாக இருக்கும். இருந்த போதிலும் இவ்வரசின் சட்டமுறைகளுக்கு மனிதன் அடிபணிந்து நடப்பான்

"மக்களை ஆளும் அரசாங்கம் நேர்மை தவறாதிருக்க வேண்டும். அரசாங்கத்தில் மக்களின் சார்பாக பொறுப்பில் இருப்பவர்களுக்கு கடுமையான சட்டத்திட்டங்கள் இருக்க வேண்டும்.

அவர்களுக்கென்று சொத்துக்கள் வைத்துக் கொள்ளும் உரிமை இருக்கக் கூடாது. சம்பளமும் கிடையாது. பொது உணவு நிலையங்களில் உணவும்,

அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க கட்டடத்தில் தங்கவும், தூங்கவும் அனுமதிக்க வேண்டும்.

அப்படி செய்வதால் சுயநலம் அவர்களிடம் இருக்காது.

இலஞ்சங்களுக்கு விலை போகமாட்டார்கள்.

அவர்களுடைய குறிக்கோள் சமூதாயத்தில் 'நேர்மை' என்னும்

அறத்தை நிலைநாட்டுதல் ஒன்றையே குறியாக கொண்டு செயல்பட வேண்டும்.''

தன்னலம் மறைந்து பொதுநலம் பெருகிய நாட்டில்தான் அறநெறி சான்ற குடியாட்சி மலரும் என்பார் வேதாத்திரியார்.

''பிறர்நலம் காக்கும் பெருநோக் கறிவு
பெரும்பாலோர்க்குப் பெருகிற நாட்டில்தான்
அறிநெறி சான்ற ஆட்சிக் குடிகளால்
அமுல் எளிதாகும் அமைதியும் உண்டாம்.'' (வேதாத்திரியம்.)

இத்தகைய குடிமக்களால் அமைதி உண்டாகும் எனத் தெளிவாக உரைக்கிறார் வேதாத்திரியார்

இன்றைய அரசியலும் ஆட்சியும் சீர்குறைந்து நிற்பதை உணரும் வேதாத்திரியார்,

- ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் அமைப்பு உரிமைகளைச் செயல்படுத்துவதைத் தீர்மானிப்பதில் இரண்டு அரசியல் கட்சிகள் மட்டுமே போதுமானது.
- அரசியல்வாதிகளுக்கும் அரசு நிர்வாகிகளுக்கும் கல்வி போதிக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் தனியாக ஒரு துறை இருக்க வேண்டும். ஆன்மீகம், உளவியல், உடலியல், சமூகவியல், பொருளாதாரம், ஒழுக்கம், பண்பாடு, செயல்விளைவு தத்துவம் இவையனைத்தும் இக்கல்வி முறையில் அமைய வேண்டும்.
- ஒருசில ஆண்டுகளில் இக்கல்வி கற்றவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும்.

- அவர்களுக்குப் பிற வாழ்க்கைத் தொழில் பார்ப்பவர்களைப் போன்று நல்ல ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- மேலும் அரசியல் தெடாபுள்ள அவர்களுக்கு வேறு எவ்விதமான தொழிலில் ஈடுபடவும் வாய்ப்ப இருக்கக் கூடாது.

என்கிறார். வேதாத்திரி மகரிஷியின் இந்த அருமையான கருத்து மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தால் ஆட்சி உயர்வானதாக அமையும்.

''உலகம் என்றமண் மீது அனைவரும் பிறந்தோம்
உயிர்காக்கும் ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் என்றே
உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் இன்று உள்ளோர் இதில் ஒன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்
உலகில் உள்ளோர் அனைவருமே உடன்பிறந்தோராவார்
ஒத்து உதவி வாழ செயல்விளைவு நீதி தேர்வோம்.'' (ஞா.க.)

ஓர் உலக ஆட்சி பற்றி அவரது இப்பார்வை உலகம் முழுவதையும் சேர்த்தே காணுமளவிற்கு விரிந்து இருக்கிறது.

- இயந்திர, விஞ்ஞான, உலக மக்கள் எண்ணிக்கை இவை மிகுந்த இக்காலத்தில் அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க, அடுத்த நாட்டைத் தாக்க, சேனை வதைத்து எந்தச் சமயத்திலுமே பயந்த கொண்டே, இருப்பதெனில் மனிதரது வாழ்வென்னாகும் ? இந்த நிலையை மாற்றி அறத்தைக் காக்க ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி.

என்கிறார்., அந்த ஆட்சியம் குடியாட்சி முறையாக இருக்க வேணடும் பிளேட்டோவின் கருத்துடன் ஒத்துப்போகிறார்.

''குடியாட்சி முறை உயர்வாய்க் கொண்ட அறிஞர் ஒரு
குடியாட்சி பிற நாட்டைக் கொடுமை செய அனுமதியார்
குடியாட்சி பிற நாட்டால் கலைய விடாத ஓர் உலகக்
குடியாட்சி அமைப்பதிலே குறிப்பாகத் தொண்டு செய்வார்.'' (ஞா.க.)

இப்வாறு ஆட்சி அமைந்தால்

''பார் முழுதும் ஏழ்மை போம். பண்பாடு சிறந்தோங்கும்
சீர்திருத்த வாழ்வு அப்போ சித்திக்கும் சிந்திப்பீர்,'' (ஞா.க.)

மேலும் கூறுகிறார்.......

- உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு தொண்டு நிலையம் அமைக்கப்படும். அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும் மக்களுக்குத் தொண்டாற்றவும் ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாகப் பணி ஆற்றும்.
- ஆன்மீகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகையையும் இணைத்து அறிஞர்களும் நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப்போது சீர்திதருத்த, ஏற்றபடி வழிகளை வகுத்துக்காட்டும்.

என்கிறார்.

வேதாத்திரி மகரிஷியின் கனவு ஒரு நாள் நிறைவேறும். அப்போது உலகெங்கும் இன்பமயமாக இருக்கும். உலக அமைதியாக இருக்கும என்பதில் ஐயமில்லை.

# உண்மையான அன்பு ஏது?

ஒருநாள் ஜென் குருவும் அவரது சீடனும் குளக்கரையில் அமர்திருந்தார்கள். சீடன் பல கேள்விகளை குருவிடம் கேட்டுக்கொண்டிருந்தான்; குருவும் நிதானமாக பதிலளித்துக் கொண்டிருந்தார்.

“குருவே! சுயநலமிக்க அன்பிற்கும் சுயநலமில்லாத அன்பிற்கும் வித்தியாசம் என்ன ? எனக்கு கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்'' என்றான்.

ஜென் குரு சீடனுக்கு பதிலை எப்படி விளக்குவது என்று சற்றும் முற்றும் பார்த்தார்.

ஒரு இளைஞன் குளக்கரையில் தூண்டிலைப் பிடித்துக்கொண்டு அமர்திருந்தான். அவனருகில் கூடையில் அவன் பிடித்துப் போட்ட மீன்கள் துடித்துக் கொண்டிருந்தது.

குரு அந்த இளைஞனிடம் பேச்சு கொடுத்தார்.

“தம்பி ! மீன் என்றால் ரொம்ப பிடிக்குமோ ?” என்றார். அவனும் “ஆமாம் ஐயா ! மீன் என்றால் எனக்கு உயிர். பிடித்து வைத்த மீன்களையெல்லாம் இன்றிரவு என் மனைவியை சமைக்கச் சொல்லி ஒரு பிடி பிடிக்கப் போகிறேன்; உங்களுக்கு வேண்டுமானால் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்; குளத்தில் நிறைய மீன் கிடக்கிறது” என்றான்.

குருவோ, “எனக்கு வேண்டாம் தம்பி !” என்று புன்சிரிப்புடன் கூறி மறுத்துவிட்டார்.

நடப்பதையெல்லாம் சீடன் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இளைஞனும் சற்று நேரத்தில் மீன் பிடித்து விட்டு கிளம்பிவிட்டான்.

ஒரு வயது முதிர்ந்த பெரியவர் குளக்கரையை நோக்கி வருவதை ஜென் குரு பார்த்துவிட்டார்.

அவர் கையில் ஒரு வெள்ளை நிறப் பை இருந்தது. குரு அதை உற்றுப் பார்த்தார்; அது பையின் நிறமல்ல, அதிலிருக்கும் பொரியின் நிறம் என்பதை தெரிந்து கொண்டார்.

அந்த பெரியவர் குளக்கரையில் வந்து அமர்ந்தார். பையிலிருந்த பொரியை எடுத்து தண்ணீரில் தூவினார். நூற்றுக்கணக்கான மீன்கள் பொரி இருக்கும் இடத்தை எறும்புகள் போல மொய்த்தன.

குரு அவரிடமும் பேச்சு கொடுத்தார். “என்ன பெரியவரே ! மீன் என்றால் ரொம்ப பிடிக்குமோ ?” என்று சற்றுமுன் அந்த இளைஞனிடம் கேட்ட அதே கேள்வியை பெரியவரிடம் கேட்டார்.

பெரியவரும், “ஆமாம் ஐயா ! மீன் என்றால் எனக்கு உயிர்; நேரம் கிடைக்கும் போதெல்லாம் இங்கு வந்து இங்குள்ள மீன்களுக்கு உணவளிப்பேன்” என்றார்.

அவரிடம் பேசிமுடித்து விட்டு சீடனின் பக்கம் திரும்பினார். “பார்த்தாயா ! இருவரும் மீனின் மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கிறார்கள் என்பது அவர்கள் ‘மீனென்றால் உயிர்’ என்று கூறும்போதே தெரிந்திருக்கும். அந்த இளைஞன், மீன்களை ‘ருசி’ என்னும் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டான்.

அவன் தன்னுடைய சந்தோஷத்தில் மட்டுமே கவனம் செலுத்தினான். ஆனால் அந்த பெரியவர் மீன்கள் பசியாறுவதற்கு சுயநலமில்லாமல் உணவளித்தார்.

இருவருக்கும் மீன்கள் பிடித்திருந்தது, ஆனால் இருவரின் நோக்கம் வேறு. மொத்தத்தில், அன்பில் சுயநலம் இருந்தால் அது அன்பே இல்லை; சுயநலமில்லாத அன்பு தான் உண்மையானது, நிரந்தரமானது” என்று குரு சீடனுக்கு புரியவைத்தார்

அன்பு வழியில் இன்பம் பெருகும் என்கிறது வேதாத்திரியம்.

''இயற்கையாக அமைந்துள்ள உடல்பலத்தை
இரும்புமுதல் பலவிதமாய் உலேகா தாலாம்
செயற்கைக் கருவிகளின் மூலம் பெருக்கிக் கொண்டு
சிந்தனையில் அவரவர்கள் உயர்ந்த மட்டில்,
பயிற்சியினால் ஒருவர்பலர் வாழ்வின் ஊடே
பாதகம். சாதகம் விளைக்கும் ஆற்றல் பெற்றோம்.
முயற்சியோடு மனிதஇனம் ஒன்றாய் என்றும்
முறையுடனே வாழஅன்பு வழியில் நிற்போம்''

(ஞானக்களஞ்சியம் பாடல்.523)

# நம்பிக்கையே வாழ்க்கை

''நாம் உறுதியான நம்பிக்கையுடன் போராடினால், நம்மிடம் இருமடங்கு ஆயுதம் இருப்பதைப் போன்றது''. '' – பிளேட்டோ.

## வேதாத்திரியம் தரும் நம்பிக்கை

- நம்பிக்கை வாழ்வில் உந்து சக்தி. நம்பினோர் கெடுவதில்லை. நம்பிக்கை நம்பிக்கையைப் பெற்றுத்தரும். நம்பிக்கையை நாம் பார்க்க முடியாது. அதற்குக் கிடைத்த பரிசைக் கொண்டுதான் அதை நம்புகிறோம்.
- வாழ்க்கைப் போராட்டத்தில் கிடைக்கும் சாந்தியே சத்தியமானது. அது மட்டுமே உண்மையானது.
- இன்றைக்கு நாம் உள்ள நிலை நம்முடைய பழைய எண்ணங்களின், செயல்களின் விளைவே ஆகும். எது நிகழவேண்டும் என்று விரும்புகிறோமா, அது நிகழ்ந்து விட்டது என்ற நம்பிக்கத்தான். அதை அடைவதற்குரிய எளிமையான வழியாகும். இதற்கு என்ன தேவை ? ''எண்ணம் ஆராய்தல்'' என்ற மனவளக்கலை பயிற்சியே.
- புத்திசாலிக்கு மட்டுமே வாழ்க்கை திருவிழாவாக அமைகிறது. வாழ்க்கை நமக்கு ஆனந்தத்தை தராது. இடத்தையும், காலத்தையும் தருகிறது. அதை நிரப்பிக் கொள்வது உங்களிடம்தான் உள்ளது.

- வெற்றி என்பது தோல்வியின் எதிர்நிலை அல்ல. ஓட்டப்பந்தய வீரன், தன் முந்தைய வேகத்தை மீறினால் போதும். அதுவே வெற்றி. தோற்கிறவர்கள் செய்ய விரும்பாததைச் செய்கிறவர்களே வெற்றியாளர்கள்.
- சுறுசுறுப்பு கடன்களை அடைப்பது மட்டுமல்ல, எதையும் எதிர்பாராமல், கடமையைச் செய்து கொண்டே போகும் அரிய சாதனம்தான் சுறுசுறுப்பு. சுறுசுறுப்புடனும் தன்னம்பிக்கையுடனும் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருந்தால், வெற்றி நிச்சயம் கிடைக்கும்.
- நம்மைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோமோ அந்த அடிப்படையில்தான் நம்மைச் சுற்றியுள்ள உலகமும் நம்மைப் பற்றி நினைக்கிறது. அதோடு மற்ற விஷயங்களைப் பற்றி நம்முடைய எண்ணம் என்ன என்பதையும் வைத்து நம்மைப் பற்றித் தீர்மானிக்கிறது.
- உங்களை அறிதல் என்றால் என்ன ? உங்களைப் பற்றிய சுயவிமர்சனம். உங்களைப் பற்றி உணர்தல், தன்னம்பிக்கையுடன் உங்களைப் பற்றி சுய பரிசோதனை செய்து கொள்ளுதல். தன்னை அறியும் ஞானம் மனிதனுக்கு மட்டும் தான் உண்டு.
- கவலையை கழற்றிவிட கற்றுக் கொள்ளுங்கள். கழற்றிவிட முடியாதபோது எதிர்நீச்சல் போடுங்கள். உங்களது சவாலை சந்திக்க முடியாமல் கவலை ஓடிப் போய்விடும்.
- வெற்றியின் இரகசியத்தில் முதன்மையானது உங்களை நீங்கள் அறிவதுதான். ''உன்னையே நீ அறிவாய்'' என்பார் சாக்ரடீஸ்.

  கொழுந்து விட்டெரியும் நம்பிக்கையும், அனைத்தையும் வெல்லக்கூடிய பேரன்பும். சர்வ சக்தி வாய்ந்த தூய்மையும் கொண்டிருந்தால், வெற்றி விரைவில் கிடைக்கும்.
- மனித உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேதாத்திரியம் அருமையான பல டிப்ஸ்களை மானுடத்திற்கு வழங்கியிருக்கிறது.
- மற்றவர்கள் சொல்லுவதை திறந்த மனதுடன் கவனமாகக் கேளுங்கள். அவர்களுக்கும் சொல்லுவதற்கு சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கும். அவர்கள் சொல்வதற்கு மதிப்பளித்து அதிலிருந்து புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். கேளுங்கள் கொடுக்கப்படும்.

# ”ஆன்மா” முரண்படும் சிந்தனையாளர்கள்

## ஆத்மா பற்றி பிளேட்டோ

பிளேட்டோ போதனையில் ஒரு நபரின் ஆத்மா பற்றி வாதிடுகிறார், பிளேட்டோ, அவர் என்னவென்றால், அவள் அழியாதவர்களுக்கு ஆதரவாக நான்கு ஆதாரங்களை மேற்கோள் காட்டுகிறார்:

1. எதிரொலிகளில் இருக்கும் சுழற்சிகள். அவர்கள் ஒருவருக்கொருவர் இல்லாமல் இருக்க முடியாது. பெரிய முன்னிலையில் இருப்பதால் ஒரு சிறிய இருப்பைக் குறிக்கிறது என்பதால், மரணத்தின் இருப்பு உயிரினத்தின் யதார்த்தத்தை பற்றி பேசுகிறது.
2. அறிவு உண்மையில் கடந்த உயிர்களைப் பற்றிய நினைவுகள் ஆகும். மக்கள் கற்பிக்காத அந்த கருத்துக்கள் – அழகு, விசுவாசம், நீதி பற்றி – தோற்றத்தின் போது நித்திய, அழியாத மற்றும் முழுமையான, புகழ்பெற்ற ஆத்மாவாகும். ஆன்மா போன்ற கருத்துக்களுக்கு ஒரு யோசனை இருப்பதால், அது அழியாதிருக்கிறது.
3. விஷயங்கள் இருமை ஆத்மாக்கள் மற்றும் டெல் இறப்பு ஆகியவற்றிற்கு எதிரான எதிர்ப்பிற்கு வழிவகுக்கிறது. உடல் இயற்கை ஷெல் பகுதியாக உள்ளது, மற்றும் ஆன்மா மனிதன் தெய்வீக பகுதியாக உள்ளது. ஆத்மா வளரும் மற்றும் தெரிந்துகொள்வது, உடல் குறைந்த பொய் உணர்வுகள் மற்றும் உணர்வுகளை திருப்தி செய்ய விரும்புகிறது. உடல் ஒரு ஆத்மா இல்லாத நிலையில் வாழ முடியாது என்பதால், ஆத்மா உடலில் இருந்து தனியாக இருக்க முடியும்.
4. ஒவ்வொரு விஷயம் மாறாமல் இயல்பு உள்ளது, அதாவது, வெள்ளை நிறம் ஒருபோதும் கருப்பு அல்ல, மற்றும் கூட – ஒற்றைப்படை. ஆகையால், மரணம் எப்பொழுதும் பதட்டத்தின் செயல்முறையாகும், இது வாழ்க்கையில் உள்ளார்ந்ததாக இல்லை. உடல் smoldering என்பதால், அவரது சாரம் மரணம். மரணத்திற்கு எதிர்மாறாக இருப்பதால், வாழ்க்கை அழியாது.

## ஆன்மா வேதாத்திரிய பார்வை

நம்மிடம் திணிவு பெற்று விளங்கும் கருமையமான காந்தம் ‘ஆன்மா’ எனவும் அழைக்கப் படுகின்றது. இந்த ஆன்மா என்ற காந்தத்திற்கு என்றுமே அழிவு என்பதில்லை.”

’’ஆன்மா என்ற சொல்லுக்குத்தான் ஒவ்வொரு மதத்திலும் எத்தனை, எத்தனை விளக்கங்கள்! இவை நமக்கு மிகுந்த குழப்பத்தைத்தான் ஏற்படுத்துகின்றது.

மகரிஷி அவர்கள்தான் கருமையம் என்ற சொல்லின் மூலம் விஞ்ஞானரீதியாக ஆன்மாவை எளிதாக விளக்குகின்றார்கள்.

இன்றைக்கு நீங்கள் பாடங்களில் ஜீனோம் என மரபு பதிவுகள் பற்றி படித்திருப்பீர்கள்..

இதுமாதிரிதான் நம் கடந்தகால வாழ்க்கையில் பெற்ற அனுபவங்கள், நம் முன்னோர்கள் பதிவுகள் என எல்லாம் காந்தப்பதிவுகளாக ஆன்மாவில் அல்லது கருமையத்தில் சேர்ந்துவிடுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் ஆன்மா என்பது காந்த அலைப் பதிவுகள் கொண்ட கருமையம் எனலாம்.

மகரிஷி சொல்கிறார்கள் –

ஒருவர் பிறந்து மூன்று வயது முதல் இன்றுவரை எண்ணிய எண்ணங்கள், சொல்லிய சொற்கள், செய்த செயல்கள் அத்தனையும் கருமையத்தில் மேலடுக்கு பதிவுகளாக உள்ளன.

இவைகளை வினைப் பதிவுகள் எனவும் சொல்லலாம்.

மேலும் பின்னோக்கிச் சென்றால், அவரது பெற்றோர்கள், அவர்களது முன்னோர்கள், விலங்கினம், நான்கறிவு ஜீவன்கள், மூன்றறிவு உயிரினங்கள், இரண்டறிவு புழு வரை வந்த, செய்த செயல்கள் எல்லாமே கருத்தொடரால் கருவமைப்புப் பதிவுகளாக மனிதனிடம் கருமையத்தில் பதித்துள்ளன.

சிற்றுயிரிலிருந்து சிறப்பு நிலையிலான மனிதன்வரையில் தன்மாற்றம் அடைந்த ஜீவ இனச் சரித்திரக் குறிப்பு பெட்டகம்தான் கருமையம் ஆகும்.

கருமையம் என்பது பிரபஞ்ச ரகசியங்கள் அனைத்தும் அடங்கிய தெய்வீக நீதி மன்றம் எனவும் சொல்லலாம்.

‘காந்தநிலை அறியாமல் கடவுள்நிலை அறிவதோ
கருமையம் அறியாமல் அறிவினை அறிவதோ
மாந்தராக வாழுகின்ற மாண்புடைய எவருக்கும்
மாற்றுவழி தத்துவத்தில் விஞ்ஞானத்தில் இல்லையே!’

(ஞானக்களஞ்சியம் பாடல் 1806)

## கருமையம் தூய்மையாக இருக்கட்டும்: வேதாத்திரியம்

உடலுக்கு மூலப் பொருள் வித்து

உயிருக்கு முக்கியப் பொருள் விண்துகள்கள்

மனதுக்கு மூலப் பொருள் சீவகாந்தம்.

இவை மூன்றும் மையம் கொண்டிருப்பது உடலுக்கு மையமான பகுதியாகிய மூலாதாரம். மூலாதாரம் என்பது மனித உடலுக்கு கருமையம்.

கருமையம் தான் மனிதனின் பெருநிதி; செயலுக்கேற்ற விளைவைத் தரும் தெய்வீக நீதிமன்றம். பிறப்பிற்கும் இறப்பிற்கும், தொடர் பிறப்புகள் பலவற்றுக்கும் இடையே வினைப்பதிவு பெட்டகமாக தொடர்ந்து வரும் மாயத்துணைவன்; தெய்வத்தையும், மனிதனையும் இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக்களம்.

இத்தகைய பெருமை வாய்ந்த கருமையத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்.

- பெற்றவர்கள், குரு, ஆட்சித்தலைவர், தெய்வம் இவர்களை மதித்து வாழ்தல்.
- ஒழுக்கம் கடமை ஈகை மூன்றும் இணைந்த அறநெறியை பின்பற்றுதல்.
- அகத்தவப் பயிற்சியை முறையாகச் செய்து வருதல்.
- இரத்தம், காற்று, உயிர், சீவகாந்தம் இவை தடையின்றி ஓடி உடலைக் காத்துக் கொள்ள ஏற்ற உடற்பயிற்சிகளை அளவோடு செய்து வருதல்.
- பெற்றோர்கள், வாழ்க்கைத் துணைவர், பெற்ற குழந்தைகள் இவர்களை பொறுப்போடும் அக்கரையோடும் காத்து உதவி வருதல்.
- இறைநிலை உணர்ந்து அந்நிலையோடு அடிக்கடி ஒன்றி பழகுதல்.
- மனித முயற்சியால் உற்பத்தி செய்த பொருட்களையும் இயற்கை வளத்தையும், பிறர் உபயோகிக்கும் பொருட்களையும் சேதப்படுத்தாது மதித்து நடத்தல்.
- நாம் பார்க்கும் ஒவ்வொரு உடலும் இயற்கை என்ற பேராற்றலால் கட்டப்பட்டிருக்கும் பெருமையை உணர்ந்து உடலுக்குள் அறிவாக விளங்குவது தெய்வத்தின் ஒளியே என்று மதித்து ஒத்தும் உதவியும் வாழ்ந்து வருதல்.

- உள்ளத்தில் பகை வஞ்சம் எதையும் வைத்துக் கொள்ளாமல் மன்னிப்பும், கருணையும் கொண்டு எல்லோருடனும் இன்முகத்தோடும் அன்போடும் பழகுதல்.
- தேசம், மதம், சாதி, இனம், மொழி இவற்றால் மனிதரை வேறுபடுத்திக் காணாமல் எல்லோரும் இயற்கையின் மக்கள் என்ற நினைவில் வாழ்தல். – தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

## விமர்சனத்தை பொய்யாக்கிய சிந்தனையாளர்கள்

"என்னை விமர்சிப்பவர்கள் பொய்யர்கள் என்பதை நான் என் வாழ்க்கையால் நிரூபிப்பேன்." – பிளேட்டோ.

பிளேட்டோவை விமர்ச்சித்தவர்கள் எல்லாம் பிளேட்டோவின் வாழ்க்கையின் வெற்றி கண்டு அமைதியானார்கள்.

இது போல வேதாத்திரியத்தின் தாரக மந்திரமான "வாழ்க வளமுடன்" என்ற மந்திர வார்த்தையில் இலக்கண பிழை உள்ளது என்று விமர்சனத்தை, வேதாத்திரிய அன்பர்கள் உடைத்து சுக்கு நூறாக்கினார்கள் என்பதும் வரலாறு

## வாழ்க வளமுடன் என்பது சரியா?

தமிழில் எழுதும் போது நாம் செய்யும் தவறுகள்.

வாழ்க வளமுடன் என்பது தவறு. "வாழ்க வளத்துடன்" என்பதே சரி.என்று ஒரு விமர்சனம்

நமது "உலக சமுதாய சேவா சங்கத்தில்" மனவளக்கலை

மன்றங்களில், அறிவுத்திருக்கோயில்களில் "வாழ்க வளமுடன்" என் கின்ற ஒரு தாரக மந்திரத்தை நமது அருள்தந்தை அவர்கள் உருவாக்கிச் தந்திருக்கிறார்கள்.

இது மனவளக்கலை கலைஞர்களாகிய நம்மால் எந்த எந்நேமும் பயன்படுத்தபடுகிறது.

இந்த மந்திரம் அற்புதங்களையெல்லாம் சாதித்திருக்கிறது என்பது நமக்குத்தான் தெரியும்.

அதனிடம் வசீகரம் எவ்வளவு இருக்கிறதென்றால், நமது இயக்கத்தைச் சாராதாரும்– இந்த வாழ்த்து வாசகத்தை மகிழ்ச்சியோடும் பயன்படுத்தி வருகிறார்கள்.

வீட்டு வாசலில் எழுதிக் கொள்கிறார்கள். ஸ்டிக்கர் ஒட்டுகிறார்கள்.

கோலம் போடுகிறார்கள். வாகனங்களில் எழுதிக் கொள்கிறார்கள்.

இன்னும் திரைப்படத்திலும் கூட வணக்கம் போடுவதற்குப் பதிலாக இதனைப் பயன் படுத்துகிறார்கள்.

அவர்கள் இந்த வாழ்த்து வாசகத்தில்– இலக்கணப்பிழை ஏதும்

இருக்காதா ? என்று ஏக்கத்தோட துருவி துருவி பார்க்கிறார்கள்.

முப்பது ஆண் டுகளுக்கு முன்னே.......................

''வாழ்க வளமுடன் என்று சொல்வது இலக்கணப்பிழை, வாழ்க

வளத்துடன் என்று சொல்வது தான் இலக்கணப்படி சரி. வேதாத்திரி மகரிஷியாகிய ஒரு நல்ல பெரியவர் இவ்வாறு தமிழை இளக்காரமாக நினைக்கலாமா ?'' என்ற கேள்வி எழுந்தது.

இந்த விஷயம்– ஒரு வாரப் பத்திரிக்கையில் – இந்த குற்றத்தை

மகரிஷியின் மேல் சுமத்தி இருந்தது.

இந்தக்குற்றச்சாட்டுக்கு, சரியான விளக்கத்தை, 2002 சனவரி மனவளக்கலைஞனில் விளக்கமாகவும், விபரமாகவும் எழுதியதைப் பார்த்து, படித்த அரைகுறை தமிழ் படித்தவர்கள் அதிர்ந்து போனார்கள். வாயடைத்துப் போனார்கள். குற்றச்சாட்டை திரும்பவும் பெற்றார்கள்.

இதற்குரிய சரியான விளக்கத்தை மீண்டும் இப்போது பதிவு

செய்கிறோம். இப்போதுள்ள தலைமுறைகளுக்கு மட்டுமல்ல, பிரபஞ்சம் உள்ள வரை, இந்த பதிவு.

ஏனென்றால் நூறாண்டுகளுக்குப் பிறகு
''வேதாத்திரியம்'' விஸ்வரூபம் எடுத்திருக்கும்.
திருக்குறளில் ''கண்ணோட்டம்'' என்ற அதிகாரத்தில் முதல் குறள்
முக்கியமான சான்றாகும்.

''கண்ணோட்டம் என்பது உலகியல் அஃதிலார்
உண்மை நிலைக்குப் பொறை.'' (திருக்குறள்.571)

கண்ணோட்டம் என்ற உயர்ந்த பண்பு இல்லாதவர்கள் பூமிக்குப் பாரமாவார்கள் என்பது இதன் பொருள்.

இங்கே பூமி என்ற பொருள்பட, நிலம் என்ற சொல்லை வள்ளுவர் கையாண்டு இருக்கிறார்.

நிலம் என்ற சொல்லோடு ''கு'' என்ற வேற்றுமையுருபு ஏறுகிறது.

வாழ்க வளமுடன் என்பது தவறு என்று சொல்பவர்கள் தான், சரியென்றால், நிலம் + கு = நிலத்துக்கு என்று வரவேண்டும்..

ஆனால் வள்ளுவரோ, அத்துச்சாரியை விட்டு விட்டு – நிலக்கு என்று எழுதியிருக்கிறார். எனவே மிகப் பெரியவர்கள் ஒரே வழி இலக்கணத்தை மீறலாம் என்பது ஒரு சான்று.

‘‘வாழ்க வளமுடன்!’’ என்று கூறுவதில் இலக்கண குற்றம் இல்லை.

''வளம்'' என்ற மகர ஈற்றுப் பெயர்ச்சொல்லிற்கு பிறகு ''உடன்'' என்ற

மூன்றாம் வேற்றுமை உருபு சேருகின்ற பொழுது இடையில், ''அத்து''ச் சாரியை சேர்க்க வேண்டியது அவசியமில்லை என்பது தெளிவாகிறது.

திருக்குறளில் மகர ஈற்றுப் பெயர்ச்சொல்லுடன் அத்துச்சாரியைச்

சேர்க்காமல்– வேற்றுமையுருபை ஏற்றி எத்தனையோ குறள்கள்

இருக்கின்றன.

''கல்லார்ப்பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை'' (திருக்குறள்.570)

''நலக்குரியார் யாரெனின் நாமநீ ர் வைப்பில்
பிறற்குரியாள் தோள் தோயா தார்'', (திருக்குறள்.149)

என்றபடி பல திருக்குறள்கள் உள்ளன.

''பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்''. (நன்னூல் சூத்திரம்)

அத்து முதலிய சாரிகைகளைத் தவிர்க்கவும் செய்யலாம் என்பது இந்த நன்னூல் சூத்திரம் உதாரணம்.

மகர ஈற்றுப் பெயர்ச் சொற்களோடு வேற்றுமை யுருபைச் சோக்கும்போது அத்துச் சாரியையைச் சேர்க்க வேண்டியதில்லை என்பதற்கு இலக்கண ஆசிரியரான நன்னுலாரை விட வேற யாரிடம் போய்ச் சான்று கேட்க முடியும்.

இன்னொரு விமர்சனமும் இதோ . . . . . .

''வாழ்க வளமுடன் என்பது வியங்கோள். அது படர்க்கையில்தான் வரும். அதாவது, அவன் வாழ்க வளமுடன், இவன் வாழ்க வளமுடன் என்று தான் வரும். தன்மையில் நான் வாழ்க வளமுடன் என்று வராது. முன்னிலையிலும் நீ வாழ்க வளமுடன் என்று வராது. முன்னால் இருப்பவரைப் பார்த்து வாழ்க வளமுடன் என்று வியங்கோளில் வாழத்துவது மடத்தனம்''.

வள்ளலார் குணரத்தினம் என்னும் தனது நண்பருக்கு எழுதி அனுப்பிய வாழ்த்து மடலில் ''வாழ்க ! வாழ்க ! என தனது நண்பரை, முன்னிலையில் வாழ்த்தியிருந்தார்.

''கயவோடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
இயலும் இடம்,பால்,எங்கும் என்ப'' (நன்னூல்)

என்னும் நன்னூல் சூத்திரம், ''க'' விலும், ''ய'' விலும் ''ர்'' இலும் முடிகின்ற வியங்கோள்கள் தன்மை, முன்னிலை படர்க்கை ஆகிய எல்லா இடங்களிலும், எல்லா பால்களிலும் பயன்படுத்தப்படும்.,

அதாவது மூன்று இடங்களிலும் வியங்கோள்களை வித்தியாசமின்றிப் பயன்படுத்தலாம் என்பது தான் நன்னூலார் விதித்த இலக்கணம்.

அதன்படி ''வாழ்க வளமுடன் !'' என்று முன்னிலையில் இருப்பவரைப் பார்த்து வாழ்த்துவது தவறில்லை..

சரி ! வள்ளலார் எழுதிய முழுப் பாடலையும் பார்ப்போம்.

ஆறாம் திருமுறையில் உள்ள பாடல் வருமாறு.

''கல்வியிற் கேள்வியிற் கடலினுங் கடந்து, அன்பறி வொழுக்கம் அமைந்த தென் னிரண்டு
காண் போன் றென் பாற் கனிவுகொண் டமர்ந்த, குணரத்தின நீ குடும்பத்துடனே
சிவந்திகழ் ஞானமும் சித்தியும் பெற்று, வாழ்க !வாழ்க
மகிழ்ந்தருட் டுணையால்
வாழ்க ! வாழ்க ! வளம் பெற வாழ்க !!

இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய 20 ஆவது திருமுகத்தின் (கடிதத்தின்) தலைப்பில் காணப்படுவது என்ற அடிக்குறிப்போடு—இராமலிங்கம் பணி மன்றம்— 2 ஆம் பதிப்பாக வெளியிட்டுள்ள திருவருட்பா ஆறாம் திருமுறை பக்கம் 1122 இல் மேற்படிப் பாடல் காணப்படுகிறது.

நமது அருள் தந்தையின் முன்னர் உருவெளித் தோற்றமாகத்தோன்றி ''நான் உன்னுடன் ஒரு பத்து வருடம் இருக்கிறேன்'' என்று வள்ளலார் கூறி மறைந்த விபரம் நாம் அறிந்ததே.

பல சொற்பொழிவுகளில் இச்செய்தியை மகரிஷிகள் குறிப்பிடுவவார்கள்.

''எனது வாழ்க்கை விளக்கம்'' என்னும் மகரிஷிகளின் நூலிலும் இது உள்ளது.
நமக்காக நமது அருள் தந்தையவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்ற

''அருட்பேரராற்றல் கருணையினால் உடல் நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வேன்'' என்ற சங்கற்பத்தை மேற்கண்ட வள்ளலார் பாடலோடு ஒப்பு நோக்கிப் பாருங்கள்.

- உடல் நலம் என்பது நோயற்ற வாழ்வு என்று வந்திருக்கிறது.
- நீளாயுள் என்பது தீர்க்க ஆயுளும் என்று வந்திருக்கிறது. (தீர்க்க என்றால் முழுமையான எனப் பொருள்).
- நிறை செல்வம் என்பது செல்வப் பெருக்கு என வந்துள்ளது.
- உயர்புகழ் என்பது கீர்த்தி என வந்துள்ளது. (நுலவரும் என்றால் எடுத்துச் சொல்வதற்கு இயலாத எனப் பொருள்).
- மெய்ஞ்ஞானம் என்பது சிவந்திகழ் ஞானம் என வந்துள்ளது. (சிவம் என்றாலும், மெய் என்றாலும் தெய்வம் ஆகும்.)

இன்னொரு விஷயம் கவனியுங்கள். வளம் பெற வாழ்க என வள்ளலார் வாழ்த்தியிருக்கிறார். வாழ்க வளமுடன் என்ற வாழ்த்தும் வள்ளலார் தந்ததே என விளங்கும்.

மேற்போக்காக பார்க்கக் கூடியவர்கள் தவத்தின் நிறைவில் நாம் கூறிக் கொள்கின்றவரிடம் சங்கற்பக் கருத்துகளை நமது மகரிஷிகள் வள்ளலாரைப் பார்த்துப் பிரதி செய்து கொண்டதாக (காப்பியடித்து விட்டதாக), கூறக்கூடும்.

உண்மை என்னவென்றால், நமது ஆசானிடம் வந்து வள்ளலார் வாழ்ந்து கொண்டிருந்தார் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை என்பதுதான். ஏனெனில், வள்ளலார் நூல்களை நமது மகரிஷிகள் படித்துப் பார்த்ததில்லை.

உலக சமாதானம் என்னும் நூலிலும் அதில் கூறப்பட்டுள்ள கருத்துக் களிலும் வள்ளலார் சொன்ன பத்தாண்டு காலத்தில் தான் எழுதப்பட்டுள்ளன.

அதற்குப் பிறகும் மகரிஷிகளால் எழுதப்பட்ட கவிகளில் மெத்தப் படித்த வள்ளலார் சாயையே மிகுந்திருப்பதைக் காணலாம்.

நமது மகரிஷிகளோ தமிழை முறையாக ஓதியதில்லை.

செய்யுள்களைத் திறம்பட எழுதுவதற்குப் படித்திருக்க வேண்டிய யாப்பிலக்கணம் நமது அருள் தந்தைக்குத் தெரியவே தெரியாது.

இதனால் தெரிவது என்ன ? தான் கூறியவாறு 10 ஆண்டுகள் மட்டும் வள்ளலார் மரிஷிகளிடம் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை எனத் தெரிகிறது.

வேதாத்திரியை மிகவும் தனக்குத் தொடர்ந்தும் பிடித்துப் போகவே, வள்ளலார் அவர்கள் தொடர்ந்தும் மகரிஷிகளுடனேயே வாழ்ந்து கொண்டிருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

- பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும் அரசியலில் புரட்சி செய்தவர்கள்.
- பிளேட்டோவின் “குடியரசும்” வேதாத்திரி மகரிஷியின் ”உலக சமாதானமும்” மானுடத்தை விழிப்படையச் செய்தன.
- இருவரும் உலக மக்களின் அடிமைத் தளையை உடைக்கப் பொங்கி எழுந்தவர்கள்.
- இருவரும் சமுதாய சீர்திருத்தவாதிகள்.
- இருவருமே விமர்சனங்களை அலட்சியப்படுத்தி தங்களது நோக்கத்தில் கவனமாக இருந்து வெற்றி பெற்றார்கள்.
- இருவரும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றி புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த ஞானிகள்.
- பெண்களின் சமவுரிமைப் போராட்டம் முதல், ரூஷ்யாவின் பொதுவுடமை இலட்சியம் வரை சகலவிதமான முற்போக்கு கருத்துக்களும் இவர்களது நூல்களில் பொதிந்துள்ளன.
- நம் ஔவையாரின் அமைதியான சமுதாய அமைப்பு, திருவள்ளுவரின் வாழ்வாங்கு வாழும்” மனித வனப்பு, பகவத் கீதையின் கர்மா தர்மம், புத்தரின் சமதர்மம், ஆஷாட பூதிக்கண்டனம், மேரஸ்டோப்ஸ் அம்மையாரின் ஆண் பெண் உறவு சாஸ்திரம்,

ஹாவலக் எல்லீஸனி பால் இயல் ஆராய்ச்சி, ப்ராய்டின் கனவு இயல் பரிசோதனை, காந்தியடிகளின் இயற்கை வைத்தியம், அமெரிக்காவின் ஜனநாயகம், இங்கிலாந்தின் மிதவாதம், ரூஷ்யாவின் சோஷலிஸம், ஹட்லிரின் நாஜிஸம், முஸோலியின் பேஸிஜம், தமிழகத்தின் முதியோர் கல்வித் திட்டம், இந்திய சாக்காரின் ''ஜனன உற்பத்தி கட்டுப்பாடு'' பிரசாரம் வரை இவர்கள் சிந்தனைகளில் இடம் பெறாதது எதுவும் இல்லை.

- ஆதாரக் கல்வி முறை, குழந்தைகள் வளர்ப்பு, பெண்கள் முன்னேற்றம், முற்பிறவி, பிற்பிறவி, மறு உலகம் வரை சகலவிதமான பிரச்சனைகளும் இவர்களது நூல்களில் விரவிக் கிடக்கின்றன.
- அரசியல் சமூகப் பிரச்சனைகளில மட்டுமல்ல, இலக்கியப் புரட்சிகளிலும் புதுமையான கவிதைப் போக்குகளிலும் இவர்களது நிழல்கள் தென்படுகிறது.
- கவி ஷெல்லி, ஸ்பென்சர். கோல்ரீட்ஜ், வேட்ஸ்வொர்த். கலீல் ஜிப்ரான், மிகெய்ல் நைமி போன்றவர்களின் கருத்துகளையும் தத்துவங்களையும் இவர்கள் படைப்புகளில் பார்க்கலாம்
- தேசம், இனம், மதம், கலாசாரம் என்னும் குறுகிய எல்லைச் சுவர்களைத் தாண்டி, விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று அடிவானத்துக்கு அப்பாலும் ஊடுருவிப் பார்த்து, எல்லாவிதச் சிந்தனைகளின் மூல வேர்களையும் இவர்களது படைப்புகளில் தரிசிக்கலாம்.
- இருவரும் பிரபஞ்சம் உள்ளவரை மானுடத்தின் மனங்களில் வசிப்பார்கள்.

## துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி
2. அன்பொளி மாத இதழ்கள், வேதாத்திரி மகரிஷி
3. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து.
4. உலகசமாதானம், வேதாத்திரி மகரிஷி.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000– அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்
6. மனவளக்கலைஞன் 2002 சனவரி, மார்ச், ஏப்ரல் இதழ்கள்)

7. The Republic – Plato
8. The Symposium – Plato
9. The works of Plato
10. Plato  Benjamin Jowett

## பானுகுமார் படைப்புலகம்  Free PDF www.banukumar.in




## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை ! சரியா ? தவறா ? இலக்கணம் என்ன சொல்கிறது ?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.

16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை
28. வேதாத்திரியத்தில் அறம்

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரிஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.

12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்

13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.

14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்

15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்

16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்

20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து

18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து

19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து

20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து

21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்

22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்

2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்

3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்

4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1

2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2

3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3

4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4

5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே

2. தாயுமானவரின் இலக்கிய நயம்

3. தாயுமானவரின் மெய்ப்பொருள்

4. தாயுமானவரின் சமயநெறி

5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா ?

6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு

7. தாயுமானவரும் மகான்களும்

8. தாயுமானவர் ஆன்மீக வாதியா ? அரசியல் ஞானியா ?

9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள் ?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது ? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன் ?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா ?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார் ?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## வரலாறு மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. மன்னார்குடி வரலாறு

## பயண நூல்கள்

1. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே !
2. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

## நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் (மானுடம் வென்றதம்மா)

## உலகப் புகழ்பெற்ற தத்துவஞானிகளும்

## வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு இலக்கியம்)

1. லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்
2. ஹிப்பாக்ரட்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
3. ஹென்றிவேர்ட்ஸ்வொர்த் லாஜ்பெலோவும் வேதாத்திரி மகரிஷியும்
4. பெர்ட்ராண்ட் ரசல்லும் வேதாத்திரி மகரிஷியும்
5. கலில் ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்
6. கன்பூசியனிசமும் வேதாத்திரி மகரிஷியும்
7. தஸ்தயேவ்ஸ்கியும் வேதாத்திரி மகரிஷியும்
8. ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்

9. லாவோசும் வேதாத்திரி மகரிஷியும்
10. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும்
11. சாக்கரட்டிஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
12. அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும்
13. பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்
14. செனகாவும் வேதாத்திரி மகரிஷியும்
15. மிர்தாவின் புத்தகமும் வேதாத்திரியமும்
16. நீட்சேயும் வேதாத்திரி மகரிஷியும்
17. சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரி மகரிஷியும்
18. வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும்
19. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரி மகரிஷியும்
20. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரஷியும்.
21. காரல் மார்க்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
22. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்.
23. சிகமண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிஷியும்.
24. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிஷியும்.
25. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிஷியும்
26. கன்பூசியஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
27. பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
28. ரூஸ்வெல்டும் வேதாத்திரி மகரிஷியும்
29. வேட்ஸ்வொர்த்தும் வேதாத்திரி மகரிஷியும்
30. மில்டனும் வேதாத்திரி மகரிஷியும்

**YOUTUBE CHANNEL NAME – VETHATHIRIAM BANUKUMAR**

**FACE BOOK GROUP வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்**